[11th February 1959

that I am told that the tempo of the work has considerably increased after the appointment of the Deputy Development Commissioners.

SRI P. G. MANICKAM: ஒவ்வொரு டெபுடி டெவலப்மெண்ட் கமிஷனருக்கும் சில ஜில்லாக்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால், தற்போது ஜில்லாக்களுடைய நிர்வாகம் ஜில்லாக் கலெக்டர்கள் மூலமாக நடை பெற்றுக்கொண்டு வருகிறது. இனிமேல் ஜில்லாக் கலெக்டர் மூலமாக நிர்வாகம் நடைபெறுமா? அல்லது, டெபுடி டெவலப்மெண்ட் கமிஷனர் மேற்பார்வையின் கீழ் ஜில்லாக்கள் தோறும் ஸ்பெஷல் ஆபீசர்கள் நியமிக்கப்படுவார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: ஜில்லாக் கலெக்டர்களுக்கு இப்பொழுது இருக்கும் வேலையையும் வைத்துக்கொண்டு, ப்ளாக்கிலே நடக்கும் வேலைகளையும் மேற்பார்வை பார்ப்பது என்பது மிகக் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, சர்க்காருக்கு உதவியாக இருக்கும் முறையிலே தான் இந்த டெபுடி டெவலப்மெண்ட் கமிஷனர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களே தவிர, கலெக்டருடைய பொறுப்பு இப்பொழுதும் கலெக்டரிடம்தான் இருக்கிறது.

SRI M. JAGANNATHAN: Sir, in view of the fact that though the tempo of the work has actually increased, the real work as such and the quantity of tht work as such in most of these places have not been increased, so far as my knowledge goes, will the Government consider the desirability of reducing the number of blocks placed under each of these Deputy Development Commissioners so that they may do effective supervision all right?

THE HON. SRI C. SUBRAMANIAM: I am only afraid that the knowledge of the hon. Member is rather poor. I would request the hon. Member to contact the committee which has been appointed, consisting of the Members of this House and the Council. They have visited the various blocks. If a reference is made to that committee, he will be able to get some useful information. I may inform him that even though there is still scope for improvement, we need not be dissatisfied with the work which is going on now.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN: ப்ளாக் அட்வைசரி கூட்டங்கள், ப்ளானிங் போர்டு கூட்டங்கள், மற்ற எல்லா கூட்டங்களிலும் எல்லா அதிகாரிகளும் கலந்து கொள்ளும்போது இந்து மத பரிபாலன டிபுடி கமிஷனர் அவர்களும் கலந்து கொண்டால் பல விஷயங்களை சர்ச்சை செய்வதற்கு வசதியாக இருக்கும். ஆகவே அவர்களும் கலந்து கொள்ளுவதற்கு சர்க்கார் ஏதாவது உத்தரவு இடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: இந்தக் கூட்டங்களில் மத விஷயமாக சர்ச்சைகள் நடைபெறுகின்றனவா என்பதை அறிவதற்கு நான் அந்தக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு இது வரையிலும் எனக்கு எந்த விதமான வாய்ப்பும் கிடைக்கவில்லை. ஆகவே மத விஷயமாக அங்கே சர்ச்சை செய்யப்படுகிறதா என்று எனக்குத் தெரியாது.

Seed Potatoes

* 202 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Home be pleased to state the steps, the Agriculture Department has taken to supply good quality "Seed Potatoes" to potato growers?

11th February 1959]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The answer is placed on the table of the House.

SRI K. SATTANATHA KARAYALAR: ஐந்து மாதங்களுக்கு முன்னதாக இதே போன்ற ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும்போதும் உருளைக் கிழங்குகளை அந்நிய நாடுகளிலிருந்து தருவிக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று இதே போன்ற பதில் தான் கொடுக்கப்பட்டுள்ளது. அதே பதில் தான் இப்பொழுதும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் இதற்கு இவ்வளவு காலதாமதம் ஏன் என்பதை அறிவிக்க முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அந்நிய நாட்டு செலாவணிதான் இதற்கு முக்கிய இடையூறாக இருக்கிறது. அதை சமாளித்துவிட்டு அதன் பிறகு அந்நிய நாட்டிலிருந்து விதைகளை வரவழைக்கவேண்டிய கவனம் செலுத்தப்பட்டுவருகிறது.

SRI K. SATTANATHA KARAYALAR: அந்நிய நாட்டு செலாவணியினால் இதற்கு காலதாமதம் ஏற்படுகிறது என்று சொல்லுகிறபடியால் இதை வரவழைப்பதற்கு முதல் இடம் கொடுக்க ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ? அதற்கு எவ்வளவு காலமாகும் என்பதையும் சொல்ல முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதற்கு போதிய இடமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. வற்புறுத்தப்பட்டும் இருக்கிறது. எப்படியும் இதைப் பெறலாம் என்ற நம்பிக்கையுடன் இந்த அரசாங்கம் இருக்கிறது.

SRI J. MATHA GOWDER: இப்பொழுது அதிகப்படியாக எட்டு விதைப் பண்ணைகள் ஆரம்பிக்கப்போவதாகச் சொல்லப்படுகிறது. அப்படி எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதைப் பற்றி பூர்வாங்க பரிசீலனை நடத்தப்பட்டு வருகிறது. இது முடிந்ததும் அது எடுத்துக் கொள்ளப்படும்.

Baby food

* 203 Q.—SRI K. SATTANATHA KARAYALAR:
SRI N. K. PALANISAMI:
SRI A. A. RASHEED:
} Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Government are aware that Ovaltine, Horlicks, and other Baby Foods are not available in the market at control rates; and

(b) if so, what steps have been taken in the matter?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No, Sir.

(b) Does not arise.

SRI A. A. RASHEED: In view of the shortage of milk foods and baby foods, have the Government recommended to the Union Government an increased import of these foods?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir. Government have not made any such approach.

* Printed as Appendix I on page 146 infra.